*ஹரோ தமிழ் பாடசாலை பேச்சுப் போட்டி 2026*

*ஆண்டு – 9 ம் அதற்கு மேற்பட்டவர்களும்(Year – 9 and above )*

*31/08/2013 ற்கு முன் பிறந்தவர்கள்*

*(ஹரோ தமிழ் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)*

## போட்டி நடைபெறும் திகதி 21/11/2026

*நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.*

## பெற்றோரும் பிள்ளைகளும்

ஒரு குடும்பம் என்பது பெற்றோர், பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள் என வாழையடி வாழையாக வரும் உறவின் சங்கமம் ஆகும். பல தலைமுறைகளுக்கும் இக்குடும்ப உறவுகளும் பாரம்பரியங்களும் தொடர்கின்றன.

பிள்ளையாக இருந்த ஒருவரே, அன்னையாகவோ, தந்தையாகவோ மாறுகின்றனர். ஆயினும் இந்த உறவுகள் மாறும்போது அவர்களது கடமைகளும்,நடவடிக்கைகளும் வேறுபடுகின்றன.பெற்றோர், பிள்ளைகள் என்ற அத்திவாரம் உறுதியாக இருப்பின் இக்குடும்ப வாழ்க்கை சீராக அமைந்துவிடும்.

பிள்ளைகளின் நலனுக்காக எமது பெற்றோர் செய்துவரும் அர்ப்பணிப்புக்களும்,தியாகங்களும் எந்த அளவுகோலினாலும் அளக்க முடியாதவை. அரவணைப்பு ஒரு புறமும், கண்டிப்பு மறுபுறமுமாக பெற்றோரின் அன்பு கிடைக்கிறது. தமக்கு இல்லாவடினும் தம் பிள்ளைகளுக்கு எல்லாம் கிடைக்க வேண்டும் என்று நினைப்பார்கள். அதற்காக அவர்கள் தங்களை வருத்தி வேலை செய்வார்கள். பிள்ளைகளின் எதிர்காலம் நல்லதாக அமையவேண்டும் என்று நினைக்காத பெற்றோர்களே இல்லை .

பிள்ளைகளான நமக்கு எல்லா வேளைகளிலும் இது புரிவதில்லை. சில வேளைகளில் எமது பெற்றோரை நாம் எதிரிகளாகக் கூடப் பார்ப்பதுண்டு. எம்மை அறியாமலே நாம் எமது பெற்றோரைச் சொல்லினாலும், செயலினாலும் நோகடிப்பதுண்டு.பிள்ளைகளான நாம் ஒரு காலத்தில் பெற்றோராக வரும்போது இது புரிய ஆரம்பிக்கும்.ஆனால் அது சில சந்தர்ப்பங்களில் காலம் கடந்ததாகவும் அமையலாம்.

பெற்றோர்களது அறிவுரைகளும், கட்டுப்பாடுகளும் எம்மைச் சீர்செய்யும் படிக்கட்டுகளாகும். வரம்புக்குள் நிற்கும் நீர் பயிரைச் செழுமைப்படுத்தும், வரம்பைத் தாண்டிய நீர் வெள்ளமாக மாறி பயிரையே அழித்துவிடும். இது போலவே பெற்றோரின் வழி நடத்தல் எம்மை நல்வழியில் செல்ல வைக்கும்.இதனை மீறி எமது போக்கில் நாம் சென்றால் தீய வழியில் விழுந்துவிட நேரிடும்.ஏனெனில் பெற்றோரே எமது கண்கண்ட தெய்வங்களாகும். எனவே எங்கள் பெற்றோர்களை வயது முதிர்ந்த காலத்தில், அன்பாகப் பார்த்து அவர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்வது எங்கள் கடமையாகும்.